**10ஆம் வகுப்பு**

# உடனடித் தேர்வு - ஜூலை 2023

## Part - III

## சமூக அறிவியல் (விடைகளுடன்)

பதிவு எண்.

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறைபாடு இருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் **நான்கு** பகுதிகளைக் கொண்டது.

### பகுதி - I

**குறிப்பு:** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்ட **மாற்று** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **(14 × 1 = 14)**

**1.** பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந் தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?

(அ) சீனா (ஆ) ஜப்பான்
(இ) கொரியா (ஈ) மங்கோலியா

**2.** பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார்?

(அ) ரூஸ்வெல்ட்
(ஆ) சேம்பெர்லின்
(இ) உட்ரோ வில்சன்
(ஈ) பால்டுவின்

**3.** எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்டது?

(அ) 1827 (ஆ) 1829
(இ) 1826 (ஈ) 1927

**4.** இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாடு / அமர்வு எங்கே நடைபெற்றது?

(அ) மெரினா
(ஆ) மைலாப்பூர்
(இ) புனித ஜார்ஜ் கோட்டை
(ஈ) ஆயிரம் விளக்கு

**5.** பாக் நீர்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா இந்தியாவை ...............லிருந்து பிரிக்கிறது.

(அ) கோவா
(ஆ) மேற்கு வங்காளம்
(இ) இலங்கை (ஈ) மாலத்தீவு

**6.** ஆறுகளின் மூலம் உருவாகும் மண் :

(அ) செம்மண்
(ஆ) கரிசல் மண்
(இ) பாலை மண்
(ஈ) வண்டல் மண்

**7.** "தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம்" என்று அழைக்கப்படும் டெல்டா ..................

(அ) காவிரி டெல்டா
(ஆ) மகாநதி டெல்டா
(இ) கோதாவரி டெல்டா
(ஈ) கிருஷ்ணா டெல்டா

**8.** கூற்று : தமிழ்நாடு தென்மேற்கு பருவகாற்று காலங்களில் அதிக மழை பெறுவதில்லை.

காரணம் : இது மேற்கு தொடர்ச்சி மலையின் மழை மறைவுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

(அ) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
(ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
(இ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு
(ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு.

https://www.Padasalai.Net www.Padasalai.Net https://bit.ly/3ipUm0 www.CBSEtips.in



**9.** இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?

(அ) ஒன்று (ஆ) இரண்டு

(இ) மூன்று (ஈ) நான்கு

**10.** உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர் :

(அ) குடியரசுத் தலைவர்

(ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்

(இ) ஆளுநர் (ஈ) பிரதம அமைச்சர்

**11.** இந்தியா தனது மிக நீண்ட நில எல்லையை எந்த நாட்டோடு பகிர்ந்து கொள்கிறது?

(அ) வங்காளதேசம் (ஆ) மியான்மர்

(இ) ஆப்கானிஸ்தான் (ஈ) சீனா

**12.** முதன்மை துறை இதனை உள்ளடக்கியது :

(அ) வேளாண்மை (ஆ) தானியங்கிகள்

(இ) வர்த்தகம் (ஈ) வங்கி

**13.** 1632 – இல் ஆங்கிலேயர்களுக்கு "கோல்டன் ஃபயர்மேன்" என்ற பட்டத்தை வழங்கியவர் :

(அ) ஜஹாங்கீர்

(ஆ) கோல்கொண்டா சுல்தான்

(இ) அக்பர் (ஈ) ஔரங்கசீப்

**14.** இந்தியாவில் உள்ள வரிகள் :

(அ) நேர்முக வரிகள்

(ஆ) மறைமுக வரிகள்

(இ) (அ) மற்றும் (ஆ)

(ஈ) இவற்றுள் ஏதுமில்லை

## பகுதி - II

**குறிப்பு :** **எவையேனும்** 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 28-க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். (10 × 2 = 20)

**15.** பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் யாவை?

**16.** வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டியலிடவும்.

**17.** ஜாலியன்வாலா பாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.

**18.** இந்தியாவின் விடுதலை போராட்டத்தில் அன்னிபெசன்டின் பங்களிப்பு யாது?

**19.** தங்களுடைய எழுத்துக்களின் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்குப் பங்களிப்பு செய்த ஆளுமைகளை பட்டியலிடவும்.

**20.** இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.

**21.** இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக.

**22.** வேளாண்மை – வரையறுக்கவும்.

**23.** இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளைக் குறிப்பிடுக.

**24.** தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக.

**25.** இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளை பட்டியலிடுக.

**26.** சார்க் உறுப்பு நாடுகளை பட்டியலிடுக.

**27.** தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயர்களை எழுதுக.

**28.** அரசுக்கு நாம் ஏன் வரி செலுத்த வேண்டும்?

## பகுதி - III

**குறிப்பு :** **எவையேனும்** 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 42-க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். (10 × 5 = 50)

**29.** கோடிட்ட இடங்களை நிரப்புக.

(i) "நவீன சீனாவின் தந்தை" என்று அழைக்கப்படுபவர் ..................

(ii) பாளையக்காரர் முறை தமிழகத்தில் ............ என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

(iii) இந்தியாவில் "தங்க இழைப்பயிர்" என அழைக்கப்படுவது ......................

(iv) முதன் முதலில் அரசியலமைப்பு எனும் கொள்கை ................. ல் தோன்றியது.

(v) இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம்...............

**30.** ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோட்டிட்டுக் காட்டுக.

**31.** 19ம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://www.Padasalai.Net https://t.me/CBSEtips.in/pUm0



**32.** (அ) வேறுபடுத்துக.

(i) புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்.

(ii) தனிநபர் தகவல் தொடர்பு மற்றும் பொதுத் தகவல் தொடர்பு.

(ஆ) காரணம் கூறுக.

கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.

**33.** 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும்.

**34.** தமிழ்நாட்டின் சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும்.

**35.** முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரிக்கவும்.

**36.** அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.

**37.** இந்திய காடுகள் பற்றி விவரிக்கவும்.

**38.** இந்தியத் தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.

**39.** பசுமைப் புரட்சி ஏன் தோன்றியது என்பதைப் பற்றி விவரிக்கவும்.

**40.** வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கிய பண்புகள் யாவை?

**41.** கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக:

1930 முதல் 1950 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

**42.** இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்.

(i) தண்டி
(ii) மதராஸ்
(iii) பாரக்பூர்
(iv) மீரட்
(v) ஜாலியன்வாலா பாக்

## பகுதி - IV

**குறிப்பு :** பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**(2 × 8 = 16)**

**43.** (அ) கீழ்கண்ட தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(I) **முதல் உலகப் போர் :**

(i) முதல் உலகப் போர் எப்பொழுது துவங்கியது?

(ii) மைய நாடுகள் என அழைக்கப்பட்ட நாடுகள் எவை?

(iii) முதல் உலகப் போரில் அமெரிக்கா எந்த ஆண்டு இறங்கியது?

(iv) ஜெர்மனியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பெயர் என்ன?

(II) **சமூக சீர்திருத்த இயக்கங்கள் :**

(i) பிரம்ம சமாஜத்தை தோற்றுவித்தவர் யார்?

(ii) சத்யார்த்தபிரகாஷ் என்னும் நூலின் ஆசிரியர் யார்?

(iii) இராமகிருஷ்ண பரமஹம்சர் என்பவர் யார்?

(iv) சுவாமி விவேகானந்தரின் இளமை பெயர் என்ன?

(அல்லது)

(ஆ) (i) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது என்பதை விவாதிக்கவும்.

(ii) கிலாபத் இயக்கம் பற்றி குறிப்பு வரைக.

**44.** (அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.

(i) ராண் ஆப் கச்
(ii) கங்கை நதி
(iii) Mt. K2
(iv) கிழக்கு தொடர்ச்சி மலை
(v) வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை
(vi) மன்னார் வளைகுடா
(vii) மாங்குரோவ் காடுகள்
(viii) மேட்டூர் அணை

(அல்லது)

(ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

(i) சோழமண்டல கடற்கரை
(ii) பாக் ஜலசந்தி
(iii) சென்னை
(iv) நீலகிரி
(v) நெல் விளையும் பகுதி
(vi) வேதாரண்யம்
(vii) வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்
(viii) அகத்தியமலை

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
www.Padasalai.Net www.CBSEtips.in

https://www.Padasalai.Net https://www.CBSEtips.in



## விடைகள்

### பகுதி - I

1. (ஆ) ஜப்பான்
2. (இ) உட்ரோ வில்சன்
3. (ஆ) 1829
4. (ஈ) ஆயிரம் விளக்கு
5. (இ) இலங்கை
6. (ஈ) வண்டல் மண்
7. (ஆ) காவிரி டெல்டா
8. (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
9. (அ) ஒன்று
10. (அ) குடியரசுத் தலைவர்
11. (அ) வங்காளதேசம்
12. (அ) வேளாண்மை
13. (ஆ) கோல்கொண்டா சுல்தான்
14. (இ) (அ) மற்றும் (ஆ)

### பகுதி - II

15. (i) உலக அளவில் நிதி சார்ந்த ஒத்துழைப்பைப் பேணுவது.
    (ii) நிதி நிலையை உறுதியானதாக வைத்திருத்தல்,
    (iii) பன்னாட்டு வணிகத்திற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பது,
    (iv) வேலைவாய்ப்பினைப் பெருக்குவது, நீடித்தப் பொருளாதார வளர்ச்சி,
    (v) உலகம் முழுவதிலும் வறுமையை ஒழிப்பது என்பனவாகும்.

16. சதாரா, சம்பல்பூர், பஞ்சாபின் சில பகுதிகள், ஜான்சி மற்றும் நாக்பூர் ஆகியன இந்த வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் ஆங்கிலேய ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டன.

17. (i) அமிர்தசரஸில் உள்ள ஜாலியன்வாலா பாக்கில் 1919 ஏப்ரல் 13ஆம் நாள் ஒரு பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
    (ii) இதனை அறிந்த ஜெனரல் ரெஜினால்டு டயர் மற்றும் ஆயுதமேந்திய வீரர்கள் மைதானத்தின் ஒரே வாயில் பகுதியை ஆக்கிரமித்து எந்தவித முன்னெச்சரிக்கையுமின்றி கண்மூடித்தனமாகச் சுடத் தொடங்கினர்.
    (iii) துப்பாக்கிகளில் குண்டுகள் தீரும்வரை 10 மணித்துளிகளுக்கு இந்தத் துப்பாக்கிச் சூடு நிகழ்ந்தது. அதிகாரப்பூர்வ அரசு தகவலின்படி, 379 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் ஓராயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

18. (i) 1916இல் தன்னாட்சி இயக்கத்தை தொடங்கிய அவர் அகில இந்திய அளவில் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையை முன்னெடுத்துச் சென்றார்.
    (ii) நியூ இந்தியா, காமன் வீல் எனும் இரண்டு செய்தித்தாள்களைத் தொடங்கினார்.
    (iii) "அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது" என கூறினார்.
    (iv) அன்னி பெசன்ட் 'விடுதலை பெற இந்தியா எப்படித் துயருற்றது', இந்தியா: ஒரு தேசம் எனும் இரண்டு புத்தகங்களையும் சுயாட்சி குறித்த துண்டுப்பிரசுரத்தையும் எழுதினார்.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

www.Padasalai.Net www.CBSEtips.in



**19.** (i) சி.வை.தாமோதரனார், உ.வே.சாமிநாதர், திரு.வி.கல்யாண சுந்தரம் (1883 - 1953),

(ii) பரிதிமாற்கலைஞர் (1870 - 1903),

(iii) மறைமலையடிகள் (1876 - 1950),

(iv) சுப்பிரமணிய பாரதி (1882 - 1921),

(v) ச.வையாபுரி (1891 - 1956),

(vi) கவிஞர் பாரதிதாசன் (1891 - 1964) ஆகியோர் தங்களுக்கே உரித்தான வழிகளில், தங்களின் எழுத்துக்கள் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்தெழுச்சிக்குப் பங்களிப்பு செய்தனர்.

**20.** இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் நர்மதை, தபதி, சபர்மதி, மாஹி.

**21.** (i) குளிர்காலம் – ஜனவரி முதல் பிப்ரவரி வரை.

(ii) கோடைக்காலம் – மார்ச் முதல் மே வரை

(iii) தென்மேற்கு பருவக்காற்று காலம் அல்லது மழைக்காலம் – ஜுன் முதல் செப்டம்பர் வரை.

(iv) வடகிழக்கு பருவக்காற்று காலம் – அக்டோபர் முதல் டிசம்பர் வரை.

**22.** வேளாண்மை என்பது குறிப்பிடப்பட்ட பயிர்களை உற்பத்தி செய்தும் மற்றும் கால்நடைகளை வளர்த்தும் மக்களுக்கு உணவையும் கால்நடைகளுக்கு தீவனத்தையும், நார் மற்றும் தேவையான இதர பொருள்களையும் வழங்குவதாகும்.

**23.**

| | கடற்கரையில் அமைந்துள்ள எண்ணெய் வயல்கள் | நிலப்பகுதியில் அமைந்துள்ள எண்ணெய் வயல்கள் |
|---|---|---|
| (i) | மும்பை ஹை எண்ணெய் வயல் (65% மிகப்பெரியது) | பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு, (திப்ருகார், சில்சாகர், மாவட்டங்கள் அசாம்) |
| (ii) | குஜராத் கடற்கரை (2வது பெரியது) | திக்பாய் எண்ணெய் வயல் (நாட்டின் மிகப் பழமையான எண்ணெய் வயல்) |
| (iii) | அலியாபெத்–எண்ணெய் வயல் (பவ் நகரின் தென்பகுதி) | மோரான் ஹக்ரிஜன் – எண்ணெய் வயல் (நாகர்காட்டியாவின் தென்மேற்கு பகுதி) |
| (iv) | அந்தமான் நிகோபாரின் உட்பகுதிகள், மன்னார் வளைகுடா | ருத்ரசாகர் – லாவா எண்ணெய் வயல்கள் (அசாம் மாநிலத்தில் சிப்சாகர் மாவட்டம்) |
| (v) | காம்பே – லூனி பகுதிகள் | சர்மா பள்ளத்தாக்கு – (மணிப்பூர்) |

**24.** கிழக்கே வங்காள விரிகுடாவும், மேற்கே கேரளாவும், வடக்கே ஆந்திரப்பிரதேசமும், வடமேற்கே கர்நாடகாவும், தெற்கே இந்தியப் பெருங்கடலும் தமிழ்நாட்டின் எல்லைகளாக அமைந்துள்ளன.

**25.** **அடிப்படை உரிமைகள் :**

(i) சமத்துவ உரிமை

(ii) சுதந்திர உரிமை

(iii) சுரண்டலுக்கெதிரான உரிமை

(iv) சமயச்சார்பு உரிமை

(v) கல்வி, கலாச்சார உரிமை

(vi) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://www.Padasalai.Net https://bit.ly/3ispUm0


**26.** சார்க் அமைப்பின் உறுப்புநாடுகள் ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், பூடான், இந்தியா, நேபாளம், மாலத்தீவு, பாகிஸ்தான் மற்றும் இலங்கை.

**27.** (i) மதிய உணவுத் திட்டம்

(ii) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்

(iii) பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டம்

(iv) புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் ஊட்டச்சத்து உணவுத் திட்டம்.

**28.** (i) வரலாற்று காலத்திலிருந்தே நாடுகளும் அதற்கு இணையாக செயல்படும் அரசுகளும் வரிவிதிப்பின் மூலம் பெற்ற நிதியிலிருந்தே பல செயல்களை நிறைவேற்றியிருக்கின்றது.

(ii) உதாரணமாக சில பொருளாதார உள்கட்டமைப்புச் செலவுகள், (போக்குவரத்து, சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி, உடல்நலம்) இராணுவம், அறிவியல் ஆராய்ச்சி, கலாச்சாரம், கலைகள், பொதுப்பணிகள், பொதுக் காப்பீடுகள் மற்றும் அரசாங்க செயல்பாடுகள் போன்றவைகளாகும்.

## பகுதி - III

**29.** (i) டாக்டர் சன் யாட் சென்

(ii) விஸ்வநாத நாயக்கர்

(iii) சணல்

(iv) அமெரிக்க ஐக்கிய நாடுகளில்

(v) பொக்ரான்

**30. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்கள் :**

(i) போரைத் தொடங்கிய குற்றத்தைச் செய்தது ஜெர்மனி என்பதால் போர் இழப்புகளுக்கு ஜெர்மனி இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் மைய நாடுகள் அனைத்தும் போர் இழப்பீட்டுத் தொகையை வழங்கவும் வலியுறுத்தப்பட்டன.

(ii) ஜெர்மன் படை 1,00,000 வீரர்களை மட்டுமே கொண்டதாக அளவில் சுருக்கப்பட்டது. சிறிய கப்பற்படையொன்றை மட்டுமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

(iii) ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடை செய்யப்பட்டது.

(iv) ஜெர்மனியின் அனைத்துக் காலனிகளும் பன்னாட்டுச் சங்கத்தின் பாதுகாப்பு நாடுகளாக ஆக்கப்பட்டன.

(v) ரஷ்யாவுடன் செய்து கொள்ளப்பட்ட பிரெஸ்ட் – லிடோவஸ்க் உடன்படிக்கையையும் பல்கேரியாவுடன் மேற்கொள்ளப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கையையும் திரும்பப் பெற்றுக் கொள்ள ஜெர்மனி வற்புறுத்தப்பட்டது.

(vi) அல்சேஸ்-லொரைன் பகுதிகள் பிரான்சுக்குத் திருப்பித் தரப்பட்டன.

(vii) முன்னர் ரஷ்யாவின் பகுதிகளாக இருந்த பின்லாந்து, எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகியன சுதந்திரநாடுகளாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டது.

(viii) போலந்து மீண்டும் உருவாக்கப்பட்டது.

**31.** (i) எழுத்தாளர்களை உருவாக்கும் நோக்கில் அறிமுகம் செய்யப்பட்ட ஆங்கிலக் கல்வி ஒரு புதிய ஆங்கிலக் கல்வி பயின்ற நடுத்தரவர்க்கத்தை உருவாக்கியது.

(ii) இவ்வர்க்கம் மேற்கத்தியக் கருத்துக்களின், சிந்தனைகளின் தாக்கங்களுக்குள்ளானது.

(iii) கல்வியறிவு பெற்ற இந்நடுத்தர வர்க்கம் எண்ணிக்கையில் சிறிதாக இருந்தாலும் அரசியலிலும், சீர்திருத்த இயக்கங்களிலும் தலைமை வகிக்கத் தொடங்கியது.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://www.Padasalai.Net https://www.CBSEtips.in



(iv) இருந்தபோதிலும் இந்தியச் சீர்திருத்தவாதிகள் தங்களுடைய பழைய கருத்துக்களையும், பழக்க வழக்கங்களையும் விமர்சன பூர்வமான ஆய்வுக்கு உட்படுத்தப் பெரிதும் தயங்கினர்.

(v) அதற்குப் பதிலாக அவர்கள் இந்தியப் பண்பாட்டிற்கும் மேலைப் பண்பாடுகளுக்கும் இடையே இணக்கத்தை ஏற்படுத்த முயன்றனர்.

(vi) இருந்தபோதிலும் அவர்களுடைய கருத்துகளும், செயல்பாடுகளும் உடன்கட்டை ஏறுதல் (சதி), பெண் சிசுக்கொலை, குழந்தைத் திருமணம் போன்ற அனைத்து வகையான கண்மூடித்தனமான மதநம்பிக்கைகள் மற்றும் சமூகத் தீமைகளை கட்டுப்படுத்த உதவியது.

(vii) இதுவே 19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகள் ஆகும்.

**32.** அ) **(i)**

| | புதுப்பிக்க இயலும் வளங்கள் | புதுப்பிக்க இயலா வளங்கள் |
|---|---|---|
| (i) | பயன்பாட்டிற்குப் பிறகு இயற்கை முறையில் மீட்டுருவாக்கம் செய்து கொள்ளும் வளங்கள் புதுபிக்கக் கூடிய வளங்கள் ஆகும். | பயன்பாட்டிற்குப் பிறகு மீண்டும் மீட்டுருவாக்கம் செய்ய இயலா வளங்கள் புதுப்பிக்க இயலா வளங்கள் ஆகும். |
| (ii) | சூரிய ஆற்றல், காற்று சக்தி, உயிரி சக்தி ஓத மற்றும் அலை சக்தி போன்றவை புதுப்பிக்கக்கூடிய வளங்கள் ஆகும். | நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு போன்றவை புதுப்பிக்க இயலா வளங்கள் ஆகும். |

**(ii)**

| | தனிநபர் தகவல் தொடர்பு | பொதுத் தகவல் தொடர்பு |
|---|---|---|
| (i) | தனிநபர்களுக்கு இடையேயான தகவல் பரிமாற்றம். | ஒரே நேரத்தில் லட்சக்கணக்கான மக்கள் தகவல்களைப் பெறுவது. |
| (ii) | இது அஞ்சல் சேவை, தந்தி தொலைபேசி, கைபேசி, குறுந்தகவல் பிரதிகள், இணையதளம் மற்றும் மின் அஞ்சல் போன்றவைகளை உள்ளடக்கியது. | அச்சு ஊடகம் மற்றும் மின்னனு ஊடகம் என்னும் இரண்டு முறைகளில் மக்களுக்குத் தகவல்களை வழங்குகிறது. |
| (iii) | இது பயனாளிகளுடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்துகிறது. | கல்வி, பொழுதுபோக்கு, தேசியக் கொள்கை மற்றும் திட்டங்களைப் பற்றி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. |

ஆ) **காரணம் :** கிழக்கு தொடர்ச்சி மலையானது ஒரு தொடர்ச்சியற்ற குன்றுகளாகும். இம்மலையானது பல இடங்களில் வங்காள கடலில் கலக்கும் ஆறுகளால் பிரிக்கப்பட்டுள்ளது.

**33.** 1. **ஆங்கிலேய இந்தியாவின் இணைப்புக் கொள்கை:**

1840 மற்றும் 1850களில் இரண்டு முக்கியக் கொள்கைகளின் மூலம் அதிக நிலப்பகுதிகள் இணைத்துக் கொள்ளப்பட்டன.

(i) **மேலாதிக்கக் கொள்கை:** ஆங்கிலேயர் தங்களை வானளாவிய அதிகாரங்கள் கொண்ட உயர் அதிகார அமைப்பாக கருதினார்கள். உள்நாட்டு ஆட்சியாளர்கள் திறனற்றவர்கள் என்ற அடிப்படையில் புதிய நிலப்பகுதிகள் இணைக்கப்பட்டன.

(ii) **வாரிசு இழப்புக்கொள்கை:** ஆண்வாரிசு இல்லையெனில் அந்த ஆட்சியாளரது இறப்புக்குப்பின் அந்தப் பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்படும்.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000
www.Padasalai.Net

https://www.Padasalai.Net www.CBSEtips.in https://bit.ly/3ipUm0



2. **இந்திய கலாச்சார உணர்வுகள் பற்றிய தீவிரத் தன்மை இல்லாதது:**

(i) 1806 ஆம் ஆண்டில் வேலூரில் சிப்பாய்கள் சமயக்குறியீடுகளை நெற்றியில் அணிவதற்கும், தாடி வைத்துக் கொள்வதற்கும் தடை விதிக்கப்பட்டதோடு தலைப்பாகைகளுக்கு பதிலான வட்ட வடிவிலான தொப்பிகளை அணியுமாறும் பணிக்கப்பட்டதை எதிர்த்து அவர்கள் கிளர்ச்சி செய்தனர்.

(ii) 1824ஆம் ஆண்டு கல்கத்தா அருகே பராக்பூரில் சிப்பாய்கள் கடல்வழியாக பர்மா செல்ல மறுத்தனர். கடல் கடந்து சென்றால் தங்களது சாதியை இழக்க நேரிடும் என்று அவர்கள் நம்பினார்கள்.

(iii) ஊதியம் மற்றும் பதவி உயர்வில் பாரபட்சம் காட்டப்படுவது குறித்தும் சிப்பாய்கள் கவலை அடைந்தனர்.

3. **கலகம் :**

(i) புதிய என்ஃபீல்டு துப்பாக்கிக்கு வழங்கப்பட்ட குண்டு பொதியுறையில் (காட்ரிட்ஜ்களில்), பசு மற்றும் பன்றிக் கொழுப்பில் இருந்து தயாரிக்கப்பட்ட பசை பயன்படுத்தப்பட்டதாக சிப்பாய்கள் பெரிதும் சந்தேகம் கொண்டனர்.

(ii) அவற்றை நிரப்பும்முன் அதை வாயால் கடிக்க வேண்டி இருந்ததை இந்து, முஸ்லிம் சிப்பாய்கள் விரும்பவில்லை.

(iii) மார்ச் 29ஆம் தேதி மங்கள் பாண்டே என்ற சிப்பாய் தனது ஐரோப்பிய அதிகாரியைத் தாக்கினார்.

**34.** (i) பெரியார் ஈ.வெ. ராமசாமி 1952இல் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

(ii) அவருடைய சுயநலமற்ற பொதுச் சேவைகளும், தொலைநோக்குப் பார்வையும் அவரை புகழ்பெற்ற ஆளுமை ஆக்கின.

(iii) சேரன்மாதேவி குருகுலப் பள்ளியில், உணவு உண்ணும் அறையில் சாதி அடிப்படையிலான பாகுபாடு நிலவுவதைக் கேள்வியுற்று மனவருத்தமடைந்தார்.

**சமயம் குறித்து பெரியார் :**

(i) முன்னேற்றமும் நீதியும் வழங்கப்பட வேண்டுமாயின் சமயம் ஒழிக்கப்பட வேண்டியதன் தேவையைப் பெரியாரின் அனுபவங்கள் அவருக்குக் கற்றுக் கொடுத்தன.

(ii) நம்பிக்கை பண்பாடு, மரபு போன்றவற்றை கட்டுடைப்பதற்குப் பெரியார் நாத்திகவாதத்தை (கடவுள் மறுப்பு) முன்வைத்தார்.

(iii) பெரியார் தன் வாழ்நாள் முழுவதும் மூடநம்பிக்கைகளுக்கு எதிராக பரப்புரை செய்தார்.

(iv) பரம்பரை அர்ச்சகர்கள் முறையை அவர் எதிர்த்தார். சாதி அடிப்படையில்லாமல் முறையான சமய அறிவைப் பெற்றுள்ள தகுதியுடைய தனி நபர்களும் அர்ச்சகர் ஆகலாம் என அவர் வாதிட்டார்.

(v) சடங்குகளற்ற சாதி மறுப்பு, சுயமரியாதை திருமணங்களைப் பரிந்துரைத்தார்.

**பெரியார் ஒரு பெண்ணியவாதி :**

(i) குழந்தைத் திருமணத்தையும் தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார்.

(ii) பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கும் சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு என ஆணித்தரமாக வலியுறுத்தினார். "திருமணம் செய்து கொடுப்பது" எனும் வார்த்தைகளை மறுத்த அவர் அவை பெண்களைப் பொருட்களாக நடத்துகின்றன என்றார்.

(iii) சொத்துக்கள், பாதுக்காவலர்களாக இருத்தல் மற்றும் தத்தெடுத்தல் ஆகியவற்றில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வேண்டுமென்றார்.

www.Padasalai.Net

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

(iv) தமிழக அரசு 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து வாரிசுரிமைச் சீர்திருத்தச் சட்டத்தை அறிமுகம் செய்ததன் மூலம் முன்னோர்களின் சொத்துகளை உடைமையாகப் பெறுவதில் பெண்களுக்குச் சம உரிமை உண்டென்பதை உறுதிப்படுத்தியது.

**35. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் :**

மாநில நிர்வாகத்தின் உண்மையான தலைவர் முதலமைச்சர் ஆவார். முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளாவன.

**1. அமைச்சரவை தொடர்பானவை :**

(i) முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் அமைச்சர்களை நியமிக்கிறார்.

(ii) அமைச்சர்களுக்குத் துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.

(iii) தனது அமைச்சரவையை மாற்றியமைக்கிறார்.

(iv) அமைச்சரவைக் கூட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தி முடிவுகளை எடுக்கிறார்.

(v) அமைச்சர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி, வழிநடத்தி, இயக்கி, அவர்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.

**2. ஆளுநர் தொடர்பானவை :**

கீழ்க்காணும் அலுவலர்களின் நியமனங்கள் தொடர்பாக ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறார்.

(i) மாநில அரசு வழக்குரைஞர்.

(ii) மாநில தேர்தல் ஆணையர்.

(iii) மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்.

(iv) மாநில திட்டக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்.

(v) மாநில நிதிக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்.

**3. சட்டமன்றம் தொடர்பானவை :**

(i) சட்டமன்ற கூட்டத்தொடரை துவக்கிவைக்கவும், ஒத்தி வைக்கவும் ஆளுநருக்கு முதலமைச்சர் ஆலோசனை வழங்குகிறார்.

(ii) சட்டமன்றத்தில் அரசின் கொள்கைகளை அறிவிக்கிறார்.

(iii) சட்டமன்றத்தில் மசோதாக்களை அறிமுகப்படுத்துகிறார்.

(iv) எந்நேரத்திலும் சட்டமன்றத்தைக் கலைக்க ஆளுநருக்குப் பரிந்துரை செய்கிறார்.

www.Padasalai.Net

**36.** (i) 'அணிசேரா இயக்கம்' என்ற சொல் 1953இல் ஐ.நா சபையில் உரையாற்றிய வி.கிருஷ்ணமேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது.

(ii) அணிசேராமை என்பது இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக விளங்குகிறது. இதன் நோக்கம் இராணுவக் கூட்டணியில் சேராமல் வெளிநாட்டு விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தைப் பராமரித்தலாகும்.

(iii) அணிசேரா இயக்கமானது 120 உறுப்பு நாடுகளையும் 17 நாடுகளைப் பார்வையாளராகவும் 10 சர்வதேச நிறுவனங்களையும் கொண்டுள்ளது.

(iv) இது ஒரு அரசியல் இயக்கத்தில் இருந்து பொருளாதார இயக்கமாக மாற்றம் கொண்டுள்ளது.

**அணிசேரா இயக்கத்தின் தலைவர்கள் :**

இந்தியாவின் ஜவகர்லால் நேரு, யுகோஸ்லாவியாவின் டிட்டோ, எகிப்தின் நாசர், இந்தோனேசியாவின் சுகர்னோ மற்றும் கானாவின் குவாமே நிக்ரூமா ஆகியோராவார்.

**37. இந்திய காடுகள் :** இந்தியாவின் இயற்கைத் தாவரம் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

**அயன மண்டல பசுமை மாறாக் காடுகள் :**

(i) ஆண்டு மழைப் பொழிவு 200 செ.மீட்டருக்கு மேலும் ஆண்டு வெப்பநிலை 22°C க்கு அதிகமாகவும், சராசரி ஆண்டு ஈரப்பதம் 70 சதவீதத்திற்கு மேலும் உள்ள பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன

(ii) கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா, அந்தமான் நிகோபார் தீவுகள், அசாம், மேற்கு வங்காளம், நாகலாந்து, திரிபுரா, மிசோராம், மணிப்பூர் மற்றும் மேகாலயா ஆகிய பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன.

(iii) இரப்பர், மகோனி எபனி, ரோஸ்மரம், தென்னை, மூங்கில், சின்கோனா, சிடார் போன்ற மரங்கள் இங்கு காணப்படுகின்றன.

**அயன மண்டல இலையுதிர்க் காடுகள் :**

(i) இவ்வகை காடுகள் ஆண்டு சராசரி மழைப் பொழிவு அளவு சுமார் 100 செ.மீ. முதல் 200 செ.மீ வரை உள்ள பகுதிகளில் காணப்படுகின்றன.

(ii) இக்காடுகளில் உள்ள மரங்கள் வசந்த காலத்திலும் கோடைக்காலத்தின் முற்பகுதியிலும் வறட்சியின் காரணமாக இலைகளை உதிர்த்து விடுகின்றன.

(iii) இங்கு தேக்கு, சால், சந்தனமரம், ரோஸ்மரம், குசம், மாகு, பாலாங், ஆம்லா, மூங்கில், சிசம் மற்றும் படாக் ஆகியவை பொருளாதார முக்கியத்துவம் வாழ்ந்த மரங்களாகும்.

**அயன மண்டல வறண்டக் காடுகள் :**

(i) ஆண்டு மழைப் பொழிவு 50 செ.மீ முதல் 100 செ.மீ வரை உள்ள பகுதிகளில் அயன மண்டல வறண்ட காடுகள் காணப்படுகின்றன.

(ii) கிழக்கு இராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப், உத்திரப்பிரதேசத்தின் மேற்குப் பகுதி, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிராவின் கிழக்குப் பகுதி, தெலுங்கானா, மேற்கு கர்நாடாகா மற்றும் தமிழ்நாட்டின் கிழக்கு பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன.

(iii) இலுப்பை (mahua), ஆலமரம், ஆவாராம் பூ மரம் (Amaldas), பலா, மஞ்சக் கடம்பு (Haldu), கருவேலம் (Babool) மற்றும் மூங்கில் ஆகிய முக்கிய மரவகைகளாகும்.

www.Padasalai.Net

**அல்பைன் / இமயமலைக் காடுகள் :**

உயரம் மற்றும் மழையளவின் அடிப்படையில் இக்காடுகள் வகைப்படுத்தப்படுகின்றன.

(i) வடகிழக்கு இந்திய மாநிலங்களில் உள்ள கிழக்கு இமயமலைச் சரிவுகளில் 1200-2400 மீ உயரம் உள்ள பகுதிகளில் காணப்படும் இக்காடுகளில் சால், ஓக், லாரஸ், அமுரா, செஸ்ட்நெட், சின்னமன் போன்ற மரங்கள் வளர்கின்றன.

(ii) ஜம்மு காஷ்மீர், இமாச்சலப்பிரதேசம், உத்ரகாண்ட் போன்ற மாநிலங்களில் மிதமான மழைப் பொழிவு உள்ள பகுதிகளில் சுமார் 900 மீட்டர் உயரமுள்ள பகுதிகளில் அரை பாலைவனத் தாவரங்களான சிறு புதர் செடிகள், சிறு மரங்கள் போன்றவை வளருகின்றன.

**அல்பைன் காடுகள் :**

(i) சுமார் 2400 மீட்டருக்கு மேல் உள்ள இமய மலைகளின் உயரமான பகுதிகளில் இவ்வகை காடுகள் காணப்படுகின்றன.

(ii) இவ்வகைக் காடுகள் ஊசியிலை மரங்களைக் கொண்டுள்ளன. ஓக் சில்வர், பிர், பைன் மற்றும் ஜுனிபர் மரங்கள், இக்காட்டின் முக்கிய மரவகைகளாகும்.

**மாங்குரோவ் காடுகள் :**

(i) இக்காடுகள் டெல்டாக்கள், பொங்கு முகங்கள் மற்றும் கடற்கழிமுகப் பகுதிகளில் காணப்படுகின்றன.

(ii) இவை ஓதங்களின் ஆதிக்கத்திற்கு உள்ளாவதால் சதுப்பு நிலக்காடுகள் மற்றும் டெல்டா காடுகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

**38.** இந்தியத் தொழிலகங்கள் பல சவால்களை எதிர்கொண்டுள்ளன. அவற்றில் சில முக்கிய பிரச்சினைகள்.

(i) மின் பற்றாக்குறை மற்றும் சீரற்ற மின் விநியோகம்.

(ii) தொழிலகங்கள் நிறுவுவதற்கு ஏற்ற பரந்த நிலப்பரப்பு இல்லாமை.

(iii) கடன் பெறுவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள்.

(iv) கடனுக்கான அதிக வட்டி விகிதம்.

(v) மலிவான ஊதியத்திற்கு வேலையாட்கள் கிடைக்காமை.

(vi) ஊழியர்களுக்கான தொழில்நுட்ப மற்றும் தொழில் முறை பயிற்சிகள் இல்லாமை.

(vii) தொழிற்பேட்டைகளுக்கு அருகில் வசிப்பதற்கு ஏற்ற சூழல் இல்லாமை.

**39.** (i) சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியா ஒரு திட்டமிட்ட வளர்ச்சிக்கான மாதிரியை தேர்வு செய்து, விவசாயத்தில் ஆரம்பத்தில் கவனம் செலுத்தியது. பின்னர், தொழில்மயமாக்கலுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

(ii) இந்தியாவில் ஏற்பட்ட தொடர்ச்சியான வறட்சி, உணவு தானியங்களின் இறக்குமதியைச் சார்ந்திருக்கத் தள்ளப்பட்டது.

(iii) இருப்பினும், அப்பொழுது இருந்த அந்நிய செலாவணி இருப்பு, திறந்த சந்தைக் கொள்முதல் மற்றும் தானியங்களின் இறக்குமதிக்கு அனுமதிக்கவில்லை.

(iv) 1960களின் முற்பகுதியில் அமெரிக்கா தனது பொதுச் சட்டம் 480 (பி.எல் 480) திட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு உதவி வழங்கியது. இந்த நிலைமை 'கப்பலுக்கு வாயில்' இருப்பு என்று அழைக்கப்பட்டது.

(v) ஒரு பெரிய மக்கள் தொகையைக் கொண்ட பசியுடன் வளர்ந்துவரும் ஒரு நாடு புரட்சிக்கான சாத்தியமான தேர்வாளராக கருதப்பட்டது.

www.Padasalai.Net www.CBSEtips.in



(vi) அமெரிக்க நிர்வாகம் ஃபோர்டு அறக்கட்டனை போன்ற மனிதநேய அமைப்புகள் உணவு உற்பத்தியை அதிகரிக்க கோதுமை மற்றும் அரிசியின் உயர் ரக விளைச்சல் வகைகளுக்கான திட்டத்தை வகுத்து அறிமுகப்படுத்தியது.

(vii) திட்டங்களின் முடிவுகள் உறுதி செய்யப்பட்டதால், அதிக எண்ணிக்கையிலான மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் இந்த திட்டம் நீட்டிக்கப்பட்டது.

(viii) இவ்வாறு, பசுமைப்புரட்சி நாட்டில் தோன்ற உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது.

**40.** வெற்றிகரமான தொழில் தொகுப்புகளின் முக்கிய பண்புகள் பின்வருமாறு:

(i) சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் புவியியல் பகுதிகளுக்கு அருகாமையில் இருத்தல் (SMEs).

(ii) துறை சார்ந்த சிறப்பு கவனம்.

(iii) நிறுவனங்களுக்கு இடையே நெருக்கமான அல்லது பரஸ்பர முறையில் இணைந்திருத்தல்.

(iv) புத்தாக்கத்தினால் நிறுவனங்களுக்கு இடையேயான போட்டி.


(v) நம்பிக்கையை எளிதாக்கும் ஒரு சமூக கலாச்சார அடையாளம்.

(vi) பல்வேறு திறமையான தொழிலாளர்கள்.

(vii) சுய உதவிக் குழுக்கள் செயல்படுதல்.

(viii) வட்டார மற்றும் நகராட்சிகளுக்கு அரசின் ஆதரவு.

**41.**





enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

www.Padasalai.Net www.CBSEtips.in



**42.**




## பகுதி - IV

**43.** (அ) **(I)**

(i) 1914

(ii) ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா ஆகிய நாடுகள் மையநாடுகள் என அழைக்கப்பட்டன.

(iii) 1917

(iv) வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

**(II)**

(i) இராஜா ராம்மோகன் ராய்

(ii) சுவாமி தயானந்த சரஸ்வதி

(iii) கல்கத்தாவுக்கு அருகேயிருந்த தட்சிணேசுவரம் என்னும் ஊரைச் சார்ந்த எளிய அர்ச்சகர் இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆவார்.

(iv) நரேந்திரநாத் தத்தா

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

https://www.Padasalai.Net https://www.Padasalai.Net www.CBSEtips.in https://t.me/Padasalai_bit.ly/3mpUm0



(அல்லது)

(ஆ) **(i) சுதேசி இயக்கம் :**

வங்கப்பிரிவினை (1905) சுதேசி இயக்கத்திற்கு இட்டு சென்று விடுதலைப் போராட்டத்தின் போக்கை மாற்றியமைத்தது. இந்தியாவின் பல பகுதிகளில் குறிப்பாக வங்காளம், பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய பகுதிகளில் புகழ்பெற்ற தலைவர்கள் தோன்றினர்.

**தமிழ்நாட்டின் எதிர்வினை :**

(i) வ.உ.சிதம்பரனார், V.சர்க்கரையார், சுப்பிரமணிய பாரதி, சுரேந்திரநாத் ஆரியா ஆகியோர் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறந்த தலைவர்களாவர். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன.

(ii) மக்களின் நாட்டுப்பற்று உணர்வுகளைத் தட்டி எழுப்பியதில் சுப்பிரமணிய பாரதியின் தேசபக்திப் பாடல்கள் மிக முக்கியமானவையாகும்.

(iii) சுதேசமித்திரன், இந்தியா ஆகிய இரண்டும் முக்கிய இதழ்களாகும். தீவிரதேசியவாதத் தலைவரான பிபின் சந்திரபால் சென்னையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது ஆற்றிய சொற்பொழிவுகள் இளைஞர்களைக் கவர்ந்தன. சுதேசி இயக்கத்தில் மாணவர்களும் இளைஞர்களும் பெருமளவில் பங்கேற்றனர்.

**சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனம் :**

(i) சுதேசியைச் செயல்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட துணிகரமான நடவடிக்கையில் ஒன்று யாதெனில் தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரனாரால் தொடங்கப்பட்ட சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனம் ஆகும்.

(ii) இவர் காலியா மற்றும் லாவோ எனும் இரு கப்பல்களை விலைக்கு வாங்கி அவற்றை தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே ஓட்டினார்.

**திருநெல்வேலி எழுச்சி :**

(i) திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் நூற்பாலைத் தொழிலாளர்களை அணி திரட்டுவதில் வ.உ.சி., சுப்பிரமணிய சிவாவின் தோளோடுதோள் நின்றார். அதே சமயத்தில் பிபின் சந்திரபால் விடுதலை செய்யப்பட்டார்.

(ii) தலைவர்கள் இருவரும் அரச துரோகக் குற்றம் சாட்டப்பட்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர். தொடக்கத்தில் வ.உ.சி.க்கு கொடுமையான வகையில் இரண்டு ஆயுள் தண்டனைகள் வழங்கப்பட்டன.

(iii) இவ்விரு தலைவர்களும் கைது செய்யப்பட்ட செய்தி பரவியதில் திருநெல்வேலியில் கலகம் வெடித்தது.

(iv) காவல்நிலையம், நீதிமன்றம், நகராட்சி அலுவலகக் கட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. காவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு நபர்கள் கொல்லப்பட்டனர்.

**(ii) கிலாபத் இயக்கம் :**

(i) 1918இல் முதலாவது உலகப்போர் முடிவுக்கு வந்தது. இசுலாமிய மதத் தலைவர் என உலகம் முழுவதும் போற்றப்பட்ட துருக்கியின் கலிபா கடுமையாக நடத்தப்பட்டார்.

(ii) அவருக்கு ஆதரவாக தோற்றுவிக்கப்பட்ட இயக்கமே கிலாபத் இயக்கம் என்றழைக்கப்பட்டது.

(iii) மௌலானா முகமது அலி மற்றும் மௌலானா சௌகத் அலி எனும் அலி சகோதரர்கள் தலைமையில் இவ்வியக்கம் நடந்தது.


(iv) இந்த இயக்கத்துக்கு ஆதரவளித்த காந்தியடிகள் இந்த இயக்கத்தை இந்து முஸ்லீம்களை இணைக்க ஒரு வாய்ப்பாகக் கருதினார்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

https://www.Padasalai.Net https://www.CBSEtips.in



**44. (அ)**





(அல்லது)

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://www.Padasalai.Net https://www.CBSEtips.in



(ஆ)




❖ ❖ ❖

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000